முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திரு. பா. கௌதமன், பி.ஏ., பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி.

வா.சா.1 நாள். 04.12.2019

| அ.வ.எண். | 53/2016 | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜ்மோகன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

அசல் வழக்கு 68/1948 வழக்கில் வாதிகள் கணபதியாப்பிள்ளை பெயரில் என்ன குற்றச்சாட்டுகள் கூறினார்கள் என்று எனக்கு தெரியாது. கணபதியாப்பிள்ளை அன்பநாதபுரம் வகையறா தர்மபாகம் சேர்மேனாக இருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 1838 உடன்படிக்கை படி தர்மபாக சொத்தின் கணக்கு வழக்குகளை 5 உறுப்பினர்களுக்கும் காட்டவில்லை என்றும், தர்மம் செய்த பிறகு மீதமுள்ள பணத்தை வங்கியில் வைப்பீடு செய்யவில்லை என்றும், தர்மபாகத்தில் வேலை செய்யும் மேலாளரை சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தியதாகவும் கமிட்டி கூட்டத்தை கூட்டவில்லை என்றும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் கணபதியாப்பிள்ளை ஒரே கட்சி செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அதில் இந்து அறநிலையத்துறை சட்டம் பிரிவு 73ன் படி இந்த நீதிமன்றத்திற்கு மேற்படி வழக்கை விசாரிக்க அதிகாரம் இல்லை என கட்சி செய்தார். இந்து அறநிலையத்துறை தன்னையும் வழக்காடியாக சேர்த்துக் கொள்ள வேண்டும் என மனு செய்தார்கள் என்றால் சரிதான். இந்து அறநிலையத்துறை அந்த வழக்கில் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். இந்து அறநிலையத்துறை சட்டம் பிரிவு 73ன் படி இந்த நீதிமன்றத்தில் மேற்படி வழக்கை விசாரிக்க இயலாது என கட்சி

செய்தார்கள். இந்த நீதிமன்றத்தில் திட்ட தீர்ப்பாணை பிறப்பிக்க இயலாது என்றும் இந்து சமய அறநிலையத்துறையில் தான்மனு செய்ய வேண்டும் என்றும் கட்சி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் 19.01.1889 உடன்படிக்கை மட்டும் தான் தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. 1838 ல் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 1838 வருடத்திய உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு 1889 உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண் 68/1948 வழக்கு நிலுவையில் இருந்த போது வாதிகளுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி தரப்பில் உடன்படிக்கை படி திட்ட தீர்ப்பாணை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்றும், 1ம் பிரதிவாதியை தலைவர் பொறுப்பிலிருந்து நீக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 68/1948 தீர்ப்பில் பக்கம் 22 பாரா 14ல் திட்ட தீர்ப்பாணை பிறப்பிக்கலாம் என்றும், இந்து சமய அறநிலையத்துறை தேவைப்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த தீர்ப்பின்மீது மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. பிவாசாஆ 1 முதல் 3 வரையிலான ஆவணங்களில் இந்து சமய கோவில்களுக்கு தர்மம் செய்ய வேண்டும் என ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்து பண்டிகைகளுக்கு அன்னதானம் செய்ய வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது. இஸ்லாமிய பண்டிகைக்கோ, தர்காவிற்கோ, கிறிஸ்துவ ஆலயங்களுக்கோ தர்மம் செய்ய வேண்டும் என ஒப்புக் கொள்ளப்படவில்லை என்றால் சரிதான். திட்ட தீர்ப்பாணையில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என அசல் வழக்கு எண் 17/1960 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதன் பிறகு அசல் வழக்கு எண் 234/1994 வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால்சரிதான். இந்த இரு வழக்கிலும் இந்து சமய அறநிலையத்துறை கட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். ஆகையால் மேற்படி இரண்டு வழக்குகளினால் ஏற்பட்ட திருத்தங்கள் இந்த பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். 1838, 1889 உடன் படிக்கைகளில் கல்லூரி தொடங்குவது பற்றியோ, பள்ளி தொடங்குவது பற்றியோ

சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அன்பநாதபுரம் தர்மபாகம் கார்காத்தபிள்ளை சமூகத்தை சேர்ந்த 5 குடும்பங்களால் உருவாக்கப்பட்டது. மார்கோணி கார்காத்தபிள்ளை சமூகத்தை சேர்ந்தவர் ஆனால் 5 குடும்பத்தை சேர்ந்தவர் அல்ல. 2ம் பிரதிவாதி 28.06.2010 அன்று சில கேள்விகள ் கேட்டு வாதிக்கு கடிதம் அனுப்பி இருந்தார். அதற்கு வாதி உரிய பதில் அனுப்பினார். 01.11.2013 ல் சில கேள்விகள் கேட்டு வாதிக்கு கடிதம் அனுப்பினார். அந்த கடிதத்திற்கும் பதில் அனுப்பப்பட்டது. 18.12.2013 அன்று சில கேள்விகள் கேட்டு 2ம் பிரதிவாதி கடிதம் அனுப்பினார். அதற்கும் வாதி பதில் அனுப்பியுள்ளார். 18.01.2014 அன்று 2ம் பிரதிவாதி அனுப்பிய கடிதத்திற்கு பதில் அனுப்பாமல் இந்த வழக்கு தாக்கல் செய்ய என்ன காரணம் என்றால் அடிக்கடி கேள்விகள் அனுப்பியதால் வழக்கு தாக்கல் செய்தோம். மார்கோனி இந்த வழக்கில் தரப்பினர் அல்ல. 2ம் பிரதிவாதி 2010 முதல் 2013 வரை கொடுத்த கடிதங்களுக்கு மேல்நடவடிக்கை எதனால் எடுக்கவில்லை என எனக்கு தெரியாது. வாதிக்கு எத்தனை ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ளன என்ற கணக்கு உள்ளது. அந்த கணக்கு இந்த வழக்கில் தாக்கல் செய்யலாம். அதில் சில நிலங்கள் சிதம்பரம் நடராஜர் கோவிலுக்கு எழுதப்பட்ட நிலங்கள் என்றால் சரிதான்.

கோரிக்கையின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.